2012 மே 16]

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருமங்கலம், தே. கல்லுப்பட்டி வழியாக பேரையூர் தடத்தின் தூரம் 47.5 கி.மீ. ஆகும். இத்தடத்தின் தூரம் அரசு உத்தரவுகளின்படி நகரப் பேருந்து இயக்க வரையறை செய்யப்பட்டுள்ள 35 கி.மீ. தூரத்திற்கும் அதிகமாக உள்ளதால், இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது.

223—

பேருந்து வசதி

வினா எண் 1804—திரு. ப. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமங்கலம் தொகுதி, வில்லூர் கிராமத்திலிருந்து புளியம்பட்டி, செங்கப்படை, திருமங்கலம் வழியாக மதுரை பெரியார் பேருந்து நிலையம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆணை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருமங்கலம், செங்கப்படை மற்றும் புளியம்பட்டி வழியாக வில்லூர் தடத்தின் தூரம் 40.0 கி.மீ. ஆகும். இத்தடத்தின் தூரம் அரசு உத்தரவுகளின்படி நகரப் பேருந்து இயக்க வரையறை செய்யப்பட்டுள்ள 35 கி.மீ. தூரத்திற்கும் அதிகமாக உள்ளதால், இத்தடத்தில் நகரப் பேருந்துகள் இயக்க இயலாது.

224—

பேருந்து வசதி

வினா எண் 1805—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கள்ளிக்குடி ஒன்றியம், எஸ். வெள்ளாகுளம் கிராமத்திலிருந்து மதுரை பெரியார் பேருந்து நிலையம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து எஸ். வெள்ளாகுளம் தடத்தின் தூரம் 48 கி.மீ. ஆகும். இத்தடத்தின் தூரம் அரசு உத்தரவுகளின்படி நகரப் பேருந்து இயக்க வரையறை செய்யப்பட்டுள்ள 25 கி.மீ. தூரத்திற்கும் அதிகமாக உள்ளதால் இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது.

225—

பேருந்து வசதி

வினா எண் 1937—திரு. ஆர். சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து மதுரைக்கு மகளிர் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது இயக்கப்பட்டு வரும் நடைகளில் மகளிர் எவ்வித சிரம மின்றி பயணம் செய்து வருகின்றனர். தற்போதுள்ள

வசதியே போதுமானவை. எனவே, தனியே மகளிர் பேருந்து இயக்க வேண்டியதில்லை.

226—

பேருந்து வசதி

வினா எண் 1945—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து பனிக்கனேந்தல், அரசனேந்தல், புக்குளம், வேதியரேந்தல் வழியாக செய்கொட்டை வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதியரேந்தலுக்கும், செய்கொட்டைக்கும் இடையில் பாலம் பழுதடைந்துள்ளதால் மானாமதுரையிலிருந்து பனிக்கனேந்தல், அரசனேந்தல், புக்குளம், வேதியரேந்தல் வழியாக செய்கொட்டைக்கு தற்போது பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

227—

பேருந்து வசதி

வினா எண் 1946—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, தெ. புதுக்கோட்டை, எமனேஸ்வரம், பாண்டியூர், பொட்டகவயல், இராமநாதபுரம், மண்டபம் வழியாக இராமேஸ்வரம் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?